## அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுதந்திர தினவிழா

கும்பகோணத்தை அடுத்துள்ள கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூாயில் நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் 72 வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு அன்னை கல்விக் குழும செயலாளர் திரு ஹீமாயூன் அவர்கள் தலைமையேற்றார். அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் மாணிக்க வாசுகி அவர்கள் முன்னிலை வகித்தார். கும்பகோணம் தாலுக்கா காவல் நிலைய காவல்துறை உதவி ஆய்வாளர் திரு. பா.தென்னரசு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தேசியக்கொடியேற்றி சிறப்புரையாற்றுகையில் இன்றைய இளைஞர்கள் சமுதாயத்தை உயர்த்த பாடுபடவேண்டும். அறிவியல்துறை, மருத்துவத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்ட நாடாக மாற்ற இளைஞர்கள் முன்வரவேண்டும்.போட்டித் தோர்வுகளில் வெற்றிபெற்று அரசுத்துறையில் பல்வேறு பொருப்புகளை அடையவேண்டும் என்று கூறி சுதந்திரதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். நிகழ்ச்சியின் முதலாவதாக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் பேரா.சோமசுந்தரம் வரவேற்றுப் பேசினார். இந்நிகழ்ச்சியில் பேராசியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக பேரா.சுரேந்திரன் நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் பேரா. அனிதா ஏற்பாடு செய்திருந்தார்.

